மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசு பரிசீலிக்கும்.

கௌசிகா, அர்ஜுனா ஆறுகளின் குறுக்கே அணை

*734 வினா திரு. ரா. கு. பெருமாள் ; மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) இராமநாதபுரம் மாவட்டம், விருதுநகர் வழியே செல்லும் கௌசிகா ஆறு மற்றும் அர்ஜுனா ஆறுகளின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டங்கள் முன்னோடி ஆய்வு நிலையில் இருக்கிறது.

திரு. ரா. கு. பெருமாள் : இந்தத் திட்டங்கள் எப்பொழுது நிறைவேற்றப்படும் என்று அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் வைப்பாறை கிராமத்தின் குறுக்கே ஒரு மேம்பாலம் இருக்கிறது. அந்த மேம்பாலத்தைத் தடுத்து, ஸ்குரூ ஷட்டர் அமைத்தால், ஏறத்தாழ 9,000 ஏக்கர் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறும். ஆகவே, அந்தத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே, அர்ஜுனா நதியின் குறுக்கே, ஆனைப்பாறை நீர்த்தேக்கம் திட்டம் முதலில் திட்டமிடப்பட்டது. ஆனால் அந்தப் பகுதியிலுள்ள மண் வேளாண்மைக்கேற்றதல்ல என்று விவசாயத் துறை கூறிய காரணத்தினால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

அர்ஜுனா நதியும், வைப்பாறும் சேரும் இடத்தில் இருக்கன்குடி கிராமத்தின் அருகே மற்றொரு நீர்த்தேக்கம் அமைக்க வேண்டி முன்னோடி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

கௌசிகா நதியும், அர்ஜுனா நதியும் சேரும் இடத்தில் மற்றொரு நீர்த்தேக்கம் அமைக்க முன்னோடி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

1978 மார்ச் 31]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, இந்தியாவில் 57 மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டங்களாக மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் இராமநாதபுரம் மாவட்டமும் ஒன்றாகும். இந்தப் பின்தங்கிய மாவட்டத்தை முன்னேற்றுவதற்காக ரூ. 800 கோடி மத்திய அரசு ஒதுக்கியுள்ளது என்றும், நிரந்தரத் திட்டம் இல்லாததால் இந்தத் தொகை ரிசர்வ் பாங்கில் முடங்கிக் கிடக்கிறது என்றும் தெரியவருகிறது. ஆதலால், முகவை மாவட்டத்தின் நீண்டகால வறட்சியைப் போக்க அம் மாவட்ட திட்டத்திற்கும், இதை எடுத்துச் செலவழிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்பது பழைய தகவல். ஆனால் பணம் எங்கேயோ முடங்கிக் கிடக்கிறது என்பது புதிய தகவல்.

திரு. ஒ. சுப்பிரமணியன் : அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது இராமநாதபுரம் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்பது பழைய தகவல் என்று சொல்கிறார்கள். எந்தெந்த வகையில் அது முன்னேற்றம் அடைந்த மாவட்டம் என்று தயவு செய்து அமைச்சரவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் பழைய தகவல் என்று சொன்னேனே தவிர, அவர் எங்கேயோ ரூ. 800 கோடி ரிசர்வ் பாங்கிலே இருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தகவல்தான் எனக்குத் தெரியவில்லை. அதைத்தான் புதிய தகவல் என்று சொன்னேன். அந்த இராமநாதபுரத்தை முன்னேற்ற பல திட்டங்கள் இந்த அரசால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

குப்பநத்தம் அணைத் திட்டம்

*735 வினா — திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

செங்கம் வட்டம், குப்பநத்தம் அணைத் திட்டத் துவக்க வேலைகள் துரிதமாக நடைபெற ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : வட ஆற்காடு மாவட்டம், செங்கம் வட்டம், குப்பநத்தம் கிராமத்தினருகே செய்யாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டம் தற்போது ஆய்வில் உள்ளது.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவரவர்களே: இன்னும் எவ்வளவு காலத்தில் இத்திட்டத்தின் வேலையைத் துவக்க முடியும் என்பதை அறியவிரும்புகிறேன்.